Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, APRIL 02 2025

புதன்கிழமை ஏப்ரல் 02, 2025 | ஒளி: 10 கதிர் 192 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE

“பட்டு வேட்டிக்கு கனவு கண்டு

# கோவணத்தை இழந்த நிலை”

## கிளின் ஸ்ரீலங்கா என்ற இலங்கையை சுத்தப்படுத்தும் திட்டத்தில் 18 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள்.அதில் தமிழர் ஒருவரும் இல்லை

வி.ரி.சகாதேவராஜா



“பட்டு வேட்டிக்கு கனவு கண்டு கட்டியிருந்த கோவணத்தை இழந்த நிலை” தான் இன்று ஈழத் தமிழர்களின் நிலை. நீலமும் பச்சையும் மாறி மாறி ஏமாற்றிய காலம் போய், இன்று சிவப்பும் ஏமாற்ற புறப்பட்டிருக்கிறது. எனவே, எந்தக் காரணம் கொண்டும் தென்னிலங்கை பேரினவாத கட்சிகளுக்கு தமிழர்கள் ஒருபோதும் வாக்களிக்கக் கூடாது என்று பாராளுமன்ற குழுத் தலைவரும் முன்னாள் கல்விப் பணிப்பாளருமான ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## “50 சதத்தை எவ்வாறு குறைப்பது”

எரிபொருள் விலையில் திருத்தம் செய்யப்பட்ட போதிலும், கட்டணங்களைக் குறைக்கப் போவதில்லை என்று கொழும்பு மேல் மாகாண முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் மற்றும் உரிமையாளர்கள் கூட்டுறவு சங்கம் தெரிவித்துள்ளது.

திங்கட்கிழமை (31) நள்ளிரவு முதல், பெட்ரோல் விலை ரூ.10 குறைக்கப்பட்டதால், முச்சக்கர வண்டி கட்டணத்தை 50 சதம் அல்லது ரூ.1 குறைப்பது நடைமுறைக்கு சாத்தியமில்லை என்று சங்கத்தின் பிரதிநிதி தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு மிகவும் திறமையான சேவையை வழங்குவதற்காக முச்சக்கர வண்டி டக்ஸி முறையை ஒழுங்குபடுத்துமாறு அவர் அரசாங்கத்தை மேலும் வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

மனித உரிமைகள் ஆணைக்குழு

## யாழ். பகிடிவதை குறித்து அவதானம்

நிதர்ஷன் வினோத்

“யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞானப் பீட புதுமுக மாணவன் மீதான பகிடிவதை” எனும் தலைப்பில் 2025 மார்ச் 31 ஆம் திகதி மற்றும் 2025 ஏப்ரல் 01 ஆம் திகதிய பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய காரியாலயமானது 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டத்தின் பிரவு 14 இன் பிரகாரம் ஆணைக்குழுவின் சொந்த பிரேரணையில் அடிப்படையில் கவனம் செலுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2





## இருவருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

புதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க மற்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரன் ஆகிய இருவரின் விளக்கமறியல் உத்தரவுகள், செவ்வாய்க்கிழமை (01) அன்று நீடிக்கப்பட்டன.

தொடர்ச்சி P2

வேட்புமனுக்கள் நிராகரிப்பு:

## 24 மணிநேர தடை உத்தரவு



உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் தேர்தல் நடவடிக்கைகளை புதன்கிழமை (02) வரை இடைநிறுத்துமாறு தொடர்புடைய தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு அறிவுறுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனுக்களை, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முகமது லஃபார் தாஹீர் மற்றும் கே.பி.பிராணந்து ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாமினால் இந்த உத்தரவு செவ்வாய்க்கிழமை (01) பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் தூய தேசத்திற்கான கட்சியின் தலைவர்

தொடர்ச்சி P2



## யானைகளால் பாதிக்கும் பிள்ளைகளுக்கு நிதியுதவி

காட்டு யானைகள் கிராமங்களுக்குள் நுழைந்து அன்றாட செயற்பாடுகளுக்கு பாதிப்பை எதிர்கொண்டிருக்கும் குடும்பங்களிலுள்ள பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கான ஊக்குவிப்பாக நிதியுதவியை வழங்க ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில் கூடிய ஜனாதிபதி நிதியத்தின் நிர்வாகச் சபை தீர்மானித்துள்ளது.

காட்டு யானைகள் கிராமங்களுக்குள் நுழைவதால் பாதிக்கப்பட்ட, காயங்களுக்கு உள்ளாகியவர்கள் இருக்கின்ற குடும்பங்களுக்கு இதன்போது முன்னுரிமை அளிக்கப்படுவதோடு, காட்டு யானைகள் கிராமங்களுக்குள் நுழைவதால் சொத்துச் சேதங்களை எதிர்கொண்ட குடும்பங்களின் பிள்ளைகளும் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

தொடர்ச்சி P2





## மியன்மார், தாய்லாந்துக்காக எமது கடமையைச் செய்வோம்

மியன்மாரில் ஏற்பட்ட பெரும் நிலநடுக்கத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர். இந்த பேரிடரால் இலங்கையும் நாட்டு மக்களும் மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச செவ்வாய்க்கிழமை (01) அன்று மியன்மார் தூதுவரிடம் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான தனது கடமைகளை உயரிய பட்சத்தில் நிறைவேற்றுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு வாக்றுதியளித்ததார்.

தொடர்ச்சி P2



## “ருஸ்திக்கு எதிரான சட்டம் பிக்குகளின் மீதும் பாயுமா?”

ஹஸ்பர் ஏ.எச்_

ருஸ்தி மேல் பாய்ந்த பயங்கரவாத தடை சட்டம் அடிப்படைவாத பிக்குகளின் மீதும் பாயுமா என பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் கேள்வி எழுப்பியுள்ளார்..

கிண்ணியாவில் திங்கட்கிழமை (31) அன்று இடம்பெற்ற பலஸ்தீன் ஆதரவு கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

ருஸ்தியின் கைதுக்குப் பின்னால் பாரிய அரசியல் நிகழ்ச்சி நிரல் உள்ளதாகவே நினைக்கிறேன்.ஸ்டிக்கர் ஒட்டியதற்காக பயங்கரவாத தடை சட்டத்தில் கைது செய்யப்பட்டமை, கவிதை எழுதிய முஸ்லிம் இளைஞனை

தொடர்ச்சி P2

## ஜப்பானில் பூகம்பம் ஏற்பட்டால் 300,000 பேர் உயிரிழக்க நேரிடும்

பசிபிக் பெருங்கடலின் கரையோரப் பகுதிகளில் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்படும் ஒரு பாரிய பூகம்பம் ஏற்பட்டால் ஜப்பானில் 1.81 டிரில்லியன் டொலர்கள் பொருளாதார நஷ்டம் ஏற்படும் என அந்நாட்டு அரசாங்கம் திங்களன்று (01) அறிக்கை வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## “மாகாணை சபைத் தேர்தல் நடத்துப்படாது”



எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் ஆறு மாதங்களுக்குள் மூன்று தேர்தல்கள் நடத்தப்பட்டதால், இந்த ஆண்டு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாது என்று அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாணந்துறையில் நடந்த, உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், அரசாங்கம் எல்லா நேரங்களிலும் தேர்தல்களை நடத்திக் கொண்டே இருக்க முடியாது, அபிவிருத்தித் திட்டங்களையும் செயல்படுத்த வேண்டும் என்றார்.

“உள்ளூராட்சித் தேர்தல்களுக்குப் பிறகு, பிரதான தேர்தல்கள் முடிவடையும். மாகாண சபைத் தேர்தல் மட்டுமே நடத்தப்பட உள்ளன. சில சட்டங்களை மாற்ற வேண்டியிருப்பதாலும், நாட்டின் அபிவிருத்திக்கு அதிக அளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாலும் மாகாண சபைத் தேர்தல்இந்த ஆண்டு தேர்தல் நடத்தப்படாது,” என்று அவர் கூறினார்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# கோவணத்தை இழந்த நிலை”

காரைதீவில் நடைபெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்களாகிய எமக்கு பாதுகாப்பு இல்லை; வாகனம் இல்லை; ஏன்? ஆறுதல் பரிசாக இருக்கக்கூடிய 10 மில்லியன் ரூபாய் வரவு-செலவுத் திட்ட நிதி கூட இல்லை. இதுதான் எமது சமகால நிலைவரம் என்றார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், கடந்த ஆறு மாத காலத்தில் தாங்கள் யார் என்பதனை இன்றைய அரசாங்கம் தெட்டத்தெளிவாக காட்டி இருக்கின்றது. இனியும் அவர்களை நம்ப முடியுமா? கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலில் நீலம், பச்சை கட்சிகளில் வெறுப்படைந்த தமிழர்கள் ஏதோ ஒரு வகையில் சிவப்பு கட்சிக்கு வாக்களித்தார்கள். ஆனால், அந்த சிவப்பு கட்சி இன்று தமிழர்களை 100% ஏமாற்றி வருவதனை நீங்கள் அறிய வேண்டும்.

உதாரணமாக, அவர்கள் கொண்டு வந்த கிளின் ஸ்ரீலங்கா இலங்கை சுத்தப்படுத்தும் திட்டத்தில் 18 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அதில் ஒருவர் ஆவது தமிழர் இல்லை. பல்லின நாடு என்கின்றார்கள். நாங்கள் இனவாத மதவாதமற்ற பேதமற்ற அரசாங்கம் என்கிறார்கள்.

ஆனால், யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் ஆறு அரச தமிழ் எம்.பிக்களை வைத்துக்கொண்டு இப்படியான இனவாதத்தை செய்கிறார்கள் என்றார்.

# ஜப்பானில் பூகம்பம் ஏற்பட்டால் 300,000 பேர் உயிரிழக்க நேரிடும்

அத்துடன், இந்த இயற்கை அனர்த்தினால் சுனாமி ஏற்படும். நூற்றுக்கணக்கான கட்டிடங்கள் இடிந்து விழுவதோடு, சுமார் 300,000 பேர் உயிரிழக்க நேரிடும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜப்பான் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 270.3 டிரில்லியன் யென் (1.8 டிரில்லியன் டொலர்கள்) பொருளாதார சேதம் ஏற்படும். அதாவது, முந்தைய மதிப்பீடு 214.2 டிரில்லியன் யென்களை விட அதிகரித்துள்ளது.

புதிய மதிப்பீட்டில் பணவீக்க அழுத்தங்கள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட நிலப்பரப்பு மற்றும் தரை தரவுகள் வெள்ளப்பெருக்கு பகுதிகள் விரிவடைந்துள்ளது என்பதைக் குறிக்கின்றன.

உலகில் அதிகமாக பூகம்பத்தால் பாதிக்கப்படும் நாடுகளில் ஜப்பானும் ஒன்றாகும். நான்காய் பள்ளத்தாக்கு பகுதியில் 8 முதல் 9 ரிச்டர் அளவிலான பூகம்பம் ஏற்படுவதற்கான 80 சதவீதமான வாய்ப்பு இருப்பதாக ஜப்பான் அரசாங்கம் கணித்துள்ளது.

இதேவேளை, மிக மோசமான சூழ்நிலையில், இந்தப் பகுதியில் 9 ரிச்டர் அளவிலான பூகம்பம் ஏற்படக்கூடும் என்ற அடிப்படையில், ஜப்பானில் 1.23 மில்லியன் மொத்த சனத் தொகையில் ஒரு வீதம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட வாய்ப்புள்ளது.

கோடை காலத்தில் தாமதமாக பூகம்பம் ஏற்பட்டால், சுனாமி மற்றும் கட்டிட இடிபாடுகளில் சிக்கி 298,000 பேர் வரை உயிரிழக்க நேரிடும்.

ஜப்பானின் தென்மேற்கு பசிபிக் கரையோரத்தில் அமைந்துள்ள பள்ளத்தாக்கு சுமார் 900 கிலோ மீற்றர் (600 மைல்) வரை செல்கிறது, அங்கு பிலிப்பைன்ஸ் கடல் பகுதி யூரேசிய தகட்டுக்கு அடியில் செல்கிறது. பூமிக்கடியில் குவிந்து வரும் டெக்டோனிக் தட்டு விகாரங்கள் சுமார் 100 முதல் 150 ஆண்டுகளுக்கு ஒரு முறை பாரிய பூகம்பத்தை ஏற்படுத்தக்கூடும்.

கடந்த ஆண்டு ஜப்பான் முதல் பாரிய பூகம்ப எச்சரிக்கையை வெளியிட்டது, ஏனெனில் பள்ளத்தாக்கின் விளிம்பில் 7.1 ரிச்டர் அளவிலான பூகம்பம் ஏற்பட்ட பின்னர் பள்ளத்தாக்கில் 9 ரிச்டர் அளவிலான பூகம்பம் ஏற்படுவதற்கான “ஒப்பீட்டளவில் அதிக வாய்ப்பு” உள்ளது.

2011 ஆம் ஆண்டில் ஏற்பட்ட 9 ரிச்டர் அளவிலான பூகம்பம் பேரழிவை ஏற்படுத்திய சுனாமியையும் வடகிழக்கு ஜப்பானில் உள்ள ஒரு அணு மின் நிலையத்தில் மூன்று உலைகளை சேதப்படுத்தியதுடன் 15,000 க்கும் மேற்பட்டோரை பலியெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# 24 மணிநேர தடை உத்தரவு

எஸ். எம் .இஷாம் மரிக்கார் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

“புத்தளம் மாநகர சபை, கற்பிட்டி பிரதேச சபை ஆகிய இரு சபைகளிலும் ஏனைய சபைகளிலும் நிராகரிக்கப்பட்ட வேட்புமனு தொடர்பில் தீர்வு எடுக்கும் வரைக்கும் தேர்தலுக்குரிய அனைத்து விடயங்களையும் நிறுத்தி வைக்குமாறு தொடர்புடைய தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது” என இஷாம் மரிக்கார், ஊடகங்களுக்கு கருத்துரைத்தார்.

புத்தளம் மாநகர சபையிலும், கற்பிட்டி பிரதேச சபையிலும் இரட்டைக் கொடி சின்னத்தில் வேட்பு மனுக்களை தூய தேசத்திற்கான கட்சி தாக்கல் செய்திருந்தது. அவற்றை நிராகரித்தமைக்காக நாங்கள் அதனை மீள் பரிசோதனை செய்ய வேண்டும் என்று வழக்குத் தாக்கல் செய்திருந்தோம். அந்த வழக்கு இன்று செவ்வாய்க்கிழமை (01) மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பரிசீலனைக்காக எடுக்கப்பட்டது.

இந்த வழக்கிலே ஒரு நியாயம் உள்ளதாக மிகத் தெளிவாக கூறி இருக்கிறார்கள். நாளை (02) இது சம்பந்தமான தெளிவான முடிவொன்று எடுக்கப்படும். அதுவரைக்கும் புத்தளம் மாநகர சபை, கற்பிட்டி பிரதேச சபை ஆகிய இரு சபைகளிலும் ஏனைய சபைகளிலும் இந்த பிரச்சினை சம்பந்தமான தீர்வு எடுக்கும் வரைக்கும் தேர்தலுக்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்தி வைக்குமாறு தற்காலிக தடை உத்தரவொன்றை நீதிமன்றம் பிறப்பித்திருக்கிறது.

ஆகவே இதுவும் எங்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாகும். நாட்டில் இன்னும் நீதி சாகவில்லை. நீதி இருக்கிறது என்பதை மிகத்தெளிவாக நீதிமன்றம் எடுத்துரைத்துள்ளது. அதே நேரம் இளைஞர்கள் அரசியலுக்குள் வர வேண்டும் என்பதற்காக போடப்பட்ட சட்டமூலத்தை வைத்தே இளைஞர்களை நிராகரித்திருக்கிறார்கள்.

ஆகவே, நிராகரிக்கப்பட்ட வேட்பு மனு தாக்கல்களுக்கு எதிராக எமக்கு சரியான தீர்வு கிடைக்க வேண்டும் என எமது நாட்டின் சட்டத்தை நம்பி நாங்கள் தாக்கல் செய்த வழக்கு வெற்றியாக அமைந்திருக்கிறது.

ஒரு நாள் இந்த நாட்டின் தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை நிறுத்தி இருக்கிறார்கள் என்றால், நீதிக்கு ஆதரவாக அநீதிக்கு எதிராக செய்கின்ற போராட்டத்திற்கு வெற்றியை நீதிமன்றம் வழங்கி இருக்கிறது.

நாங்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்றோம். நாளை புதன்கிழமை (02) எங்களுக்கு நல்ல முடிவு கிடைக்கும். ஆகவே எங்களுடைய ஆதரவாளர்கள், ஏக்கத்தோடு இருக்காமல் எதிர்பார்ப்போடும் நம்பிக்கையோடும் இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

இது குறித்து, சட்டத்தரணி அஜிரா அஸ்வர், கருத்துரைக்கையில்,

புத்தளம் மாநகர சபை மற்றும் கற்பிட்டி பிரதேச சபைக்கான வேட்புமனுக்கள், நல்லாட்சிக்கான தேசிய முன்னணி மற்றும் தூய தேசத்திற்கான கட்சிக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இதற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில்25 ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்திருந்தோம். இதனடிப்படையில், செவ்வாய்க்கிழமை (01) குறித்த வழக்கு பரிசீலிக்கப்பட்டு அதனடிப்படையில், மேன்முறையீட்டு நீதிமன்றம் இதற்கான தற்காலிக தடை உத்தரவொன்றை பிறப்பித்துள்ளது. நாளை புதன்கிழமை (02) ஆம் திகதி வரை எந்த வித தேர்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளக்கூடாது என மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் லஃபார் தாஹீர் தலைமையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றார்.

## SLPC பணிப்பாளர் சபை உறுப்பினராக

# செந்தில்வேலவர் நியமனம்

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் (SLPC) பணிப்பாளர் சபை உறுப்பினராக தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமன கடிதத்தை ஊடகத்துறை மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கடந்த (26/03/2025) ஊடகத்துறை அமைச்சில் வைத்து வழங்கினார்.



# யாழ். பகிடிவதை குறித்து அவதானம்

1998 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கல்வி நிறுவனங்களில் பகிடிவதையையும் வேறுவகையான வன்செயல்களையும் தடை செய்தல் சட்டம், பகிடிவதை செய்வதானது இலங்கையின் மிகக் கடுமையான குற்றங்களில் ஒன்றாகவும்; பிணை வழங்கப்படாத குற்றமாகவும் பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் பகிடிவதை செய்யும் அல்லது ஊக்குவிக்கும் எந்தவொரு நபரும் கைது பிடியாணை இல்லாமல் கைது செய்யப்படலாம் எனவும் ஏற்பாடுகளை கொண்டுள்ளது

எனவே, யாழ்ப்பாண பல்கலைகழகத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் மேற்குறித்த பகிடிவதை சம்பவம் தொடர்பில் உடனடி சட்ட நடவடிக்கை எடுத்து அது தொடர்பிலான அறிக்கையினை எதிர்வரும் 04.04.2025 இற்கு முன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்துக்கு அனுப்பிவைக்குமாறு யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர், கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# இருவருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

பாராளுமன்ற உறுப்பினர் சமார சம்பத்தை எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மாவட்ட நீதவான் தனுஜா லக்மாலி உத்தரவிட்டார்.

மூன்று வழக்குகள் தொடர்பில் கடந்த 27ஆம் திகதி கைது செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர், அன்றையதினம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, இரண்டு வழக்குகளில் பிணை வழங்கப்பட்ட போதும், ஒரு வழக்கில், ஏப்ரல் 1 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

ஊவா மாகாண சபையின் பெயரில் தேசிய சேமிப்பு வங்கியில் பராமரிக்கப்பட்டு வந்த ஆறு நிலையான வங்கிக் கணக்குகள் திரும்பப் பெறப்பட்டதாகவும், இதனால் ரூ. 1,000 கோடி இழப்பு ஏற்பட்டதாகவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தாக்கல் செய்யப்பட்டது.

இதேவேளை, இலஞ்சம் பெற்றுக்கொள்வதற்கு உதவி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரனின் விளக்கமறியலை எதிர்வரும் 08ஆம் திகதி வரை நீடித்து, கொழும்பு நீதவான் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை (01) உத்தரவிட்டுள்ளது.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகளால் மார்ச் 25 ஆம் திகதி கைது செய்யப்பட்ட வியாழேந்திரன், நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் ஏப்ரல் 1ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

மணல் அகழ்வு உரிமம் வழங்குவதற்காக 1.5 மில்லியன் ரூபாய் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# “ 50 சதத்தை எவ்வாறு குறைப்பது”

“ஒரு லீற்றர் பெட்ரோல் ரூ. 10 குறைக்கப்பட்டுள்ளது. ஒரு முச்சக்கர வண்டி ஒரு லீற்றர் பெட்ரோலைப் பயன்படுத்தி 20 கிலோ மீட்டர் பயணம் செய்யலாம். கட்டணத்தை ரூ. 10 குறைத்தாலும், ஒரு கிலோமீட்டர் கட்டணம் 50 சதம் ஆகும். இந்த 50 சதத்தை குறைக்க முடியுமா? இது நடைமுறைக்கு ஏற்றதல்ல,” என்று அவர் மேலும் கூறினார்.

இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் (CPC) திங்கட்கிழமை (31) நள்ளிரவு முதல் எரிபொருள் விலைக் குறைத்துள்ளது. லங்கா இந்தியன் ஒயில் கம்பெனி (LIOC), பெட்ரோல் விலையை ‘சைபெட்கோ’வின் விலைக்கு சமப்படுத்தியது.

அதன்படி, 92 ஒக்டேன் பெட்ரோல் லீற்றர் ஒன்றின் விலை ரூ.10 ஆக அதன்படி, 309 ரூபாயாக இருந்த ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றரின் புதிய விலை 299 ரூபாயாகும்.95 ஒக்டேன் பெற்றோல் லீற்றரின் விலை 10 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 361 ரூபாயாகும். ஏனைய எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# யானைகளால் பாதிக்கும் பிள்ளைகளுக்கு நிதியுதவி

பிரதேச செயலாளரின் மேற்பார்வைக்கு அமைய நிதியுதவிக்கு தகுதியுடைய குடும்பமாக இருக்க வேண்டும் என்பதுடன், 1ஆம் வகுப்பு தொடக்கம் க.பொ.த. சாதாரண தரம் அல்லது க.பொ.த. உயர்தரம் வரையில் கல்வி பயிலும் பிள்ளைகள் இருக்கின்ற குடும்பமாக இருப்பதும் இந்த நிதியுதவிக்கான தகுதியாக கருதப்படும்.

2025-01-01 திகதி அல்லது அதற்கு பின்னரான தினங்களில் காட்டு யானைகள் கிராமங்களுக்குள் நுழைந்த காரணத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பமாக இருக்க வேண்டும் என்பதோடு, தற்போதும் ஜனாதிபதி நிதியத்தினால் செயற்படுத்தப்படும் க.பொ.த. உயர்தர புலமைபரிசு வேலைத் திட்டத்தின் பயனாளியாக இல்லாதிருப்பதும் தகுதியாக கருத்தப்படும்.

இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக 1ஆம் வகுப்பு முதல் 11 வரையில் கல்வி பயிலும் தெரிவு செய்யப்பட்ட பிள்ளையொன்றுக்காக 3,000 அடிப்படையில் அதிகபட்சமாக 12 மாத காலத்திலற்கும், 12 மற்றும் 13 வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு 5,000 அடிப்படையில் அதிகபட்சமாக 12 மாத காலத்திற்கும் 2025ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் நிதியுதவி வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்படி தமது பிரதேச செயலாளர் பிரிவுகளில் தகுதியை பூர்த்தி செய்த குடும்ப பிள்ளைகளின் தகவல்களை பெற்றுக்கொண்டு தமது தனிப்பட்ட மேற்பார்வை மற்றும் பரிந்துரையுடன் குறித்த விண்ணப்பங்களை தாமதமின்றி ஜனாதிபதி நிதியத்திற்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# “ருஸ்திக்கு எதிரான சட்டம் பிக்குகளின் மீதும் பாயுமா?”

கோட்டாபய அரசாங்கத்தால் பயங்கரவாத தடை சட்டத்தில் கைது செய்யப்பட்டமையே நினைவு வருகின்றது.

தற்போது இந்த கைதுக்கு பொலிஸாரால் சொல்லப்பட்ட காரணத்தைப் பார்க்கும்போது அவர்கள் ருஸ்தியை குற்றவாளியாக்குவதற்கான காரணத்தை தற்போது தேடுவதாகவே உணர்கிறேன்.

பொலிஸாரின் கூற்றுப்படி அவர் அடிப்படைவாத கருத்துக்களைக் கொண்டிருப்பின் ஸ்டிக்கர் ஒட்டும்வரை அவர் ஓர் அடிப்படைவாதி என பொலிஸாருக்குத் தெரியாது. இலங்கையில் ருஸ்தி மட்டும்தானா அடிப்படைவாத கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்.ஒவ்வொரு சமூகத்திலும் தாம் சார்ந்த சமூகத்தின் அடிப்படைவாத கருத்துக்களைக் கொண்ட பலர் உள்ளனர்.அவ்வாறு எனில் அவர்கள் அனைவரையும் கைது செய்ய முடியுமா?. அடிப்படைவாத கருத்துக்களை வெளிப்படையாகக் கூறும் பிக்குகளின் மீது இந்த சட்டம் பாயுமா? என்றும் கேள்வி எழுப்பினார்

இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் ஓய்வு பெறுவதற்காக, இஸ்ரேலிய கொத்தனியாக இலங்கை மாறிவருவதை நாம் பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டி உள்ளோம். அவர்களின் வணக்கஸ்தலங்கள் நிறுவப்படுவதையும் அவர்களின் ஆக்கிரமிப்பு செயற்பாடுகளையும் கூறியுள்ளோம். அதற்கான நடவடிக்கை ஒன்றையும் இந்த அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.அது ஏன் என்பது இந்த கைது மூலமாகத் தெளிவாகிறது.

இஸ்ரேலுக்கு எதிராக ஒரு ஸ்டிக்கர் ஒட்டியதுக்கே பயங்கரவாத சட்டம் எனில், இஸ்ரேலின் பாதுகாவலனாகவே இந்த அரசாங்கம் செயற்படுகிறது என்பது தெளிவாகிறது.

பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குவோம், இன மத பேதமற்ற அரசு என்ற கோஷங்களுடன் ஆட்சிக்கு வந்த இந்த அரசு தற்போது அதே பயங்கரவாத சட்டத்தையே ராஜபக்‌ஷக்களை விட மோசமாகப் பயன்படுத்த ஆரம்பித்திருக்கிறது. இந்த இரட்டை வேடத்துக்கு விரைவில் மக்கள் பதில் வழங்குவார்கள். ருஸ்தியின் விடுதலைக்காக நாம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம் எனவும் தெரிவித்துள்ளார்.

# மியன்மார், தாய்லாந்துக்காக எமது கடமையைச் செய்வோம்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று கொழும்பிலுள்ள மியன்மார் மற்றும் தாய்லாந்து தூதரகங்களுக்கு விஜயம் செய்து இந்த அனர்த்தம் தொடர்பாக தனது வருத்தத்தையும் கவலையையும் அனுதாபத்தையும் தெரிவித்ததன் பிற்பாடு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது நாட்டு சம்புத்த சாசன முறையோடும் பௌத்த நாகரிகத்தோடும் மியான்மருக்கு மிக நெருங்கிய தொடர்பு காணப்படுவதால்,

பொறுப்புள்ள பௌத்தர்களாக மதத்தின் பிரகாரம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு முடியுமான நிவாரணத்தையும் முடியுமான ஒத்துழைப்புகளையும் பெற்றுத் தருவேன். மியன்மார் மக்களுக்கு இயன்ற உட்சபட்ச நிவாரணங்களையும், உதவுகளையும் வழங்குமாறு செல்வந்த நாடுகளிடமும் சர்வதேச சமூகத்திடமும் கோரிக்கை விடுக்கின்றேன் என எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது தெரிவித்தார்.

# "இருப்பை பாதுகாக்க முன்வாருங்கள்"

■ பாறுக் ஷிஹான்

காரைதீவு மண் என்பது அழிவின் விளிம்பில் இருக்கின்றது. தேசிய கட்சிகள் காரைதீவு பிரதேச சபையினை இம்முறை தமிழர்கள் கைப்பற்றக்கூடாது என கூறி எம்மில் சிலரை மூளைச்சலவை செய்து தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டாம் என கூறுகின்றார்கள். வடக்கு, கிழக்கில் முதல் முதலாக திருவுளச்சீட்டின் ஊடாக காரைதீவு பிரதேச சபையினை தமிழரசுக் கட்சி கைப்பற்றியதை எல்லோரும் அறிவோம் என இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு கிளைத் தலைவரும் வேட்பாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு கிளை தலைமையிலான பிரதேச சபை வேட்பாளர் அறிமுக நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை(30) அன்று விவேகானந்தா விளையாட்டுக் கழக மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், உண்மையில் எமது பாராளுமன்ற



உறுப்பினர்கள் பலவற்றை பேசியிருந்தாலும், எமது மண்ணுக்கு அவை மிகவும் பொருத்தமானவையாகும். எமது காரைதீவு மண் என்பது அழிவின் விளிம்பில் இருக்கின்றது என்பதை அனைத்து பிரதேச வாழ் மக்கள் உணர்ந்து கொண்டு வாக்களிக்க வேண்டிய தார்மீக பொறுப்பில் இருக்கின்றீர்கள்.

மொத்தமாக காரைதீவு பிரதேச சபையில் 7 வட்டாரங்கள் உள்ளடங்குகின்றன. தமிழர் பிரதேசங்கள் 4 வட்டாரங்களாகவும் 3 வட்டாரங்கள் முஸ்லிம்களின் வட்டாரங்களாகவும் காணப்படுகின்றன. முஸ்லிம்கள் அவர்கள் சார்ந்து வாக்குகளை அளிக்கின்றார்கள்.

தமிழர்களுக்கு தமிழர்கள் வாக்குகளை அளிக்கின்றார்கள். ஆனால், காரைதீவு பிரதேச சபையினை இம்முறை தமிழர்கள் கைப்பற்றக்கூடாது என சில தேசிய கட்சிகள், எம்மில் சிலரை மூளைச்சலவை செய்து தமிழரசுக்கட்சிக்கு வாக்களிக்க வேண்டாம் என கூறுகின்றார்கள்.

ஆகையால், எமது இருப்பை தக்கவைப்பதற்காக சரியான வழிகாட்டல்களை வழங்கி உரிய அரசியல் செயற்திட்டங்களை முன்னெடுப்பதன் ஊடாக வெற்றி பெற முடியும். இல்லாவிடின் மரண வீடு முதல் இதர செயற்பாட்டிற்காக தமிழன் மண்டியிட வேண்டும். 62 சதவீதம் உள்ள நாங்கள் ஆட்சி அமைப்பதா? அல்லது மற்றவர்களுக்கு தாரை வார்ப்பதா? என்பதை இதை காரைதீவு புத்திஜீவிகள் உள்ளம் சார்ந்து சிந்தித்து செயற்படாவிடின் வரலாற்று துரோகம் மற்றும் பிழைகளை விட்டவர்களாக மாற நேரிடும் என்றார்.

ரயிலில் செல்ஃபி எடுத்த

## ஆஸி. பிரஜை படுகாயம்

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கிச் சென்ற எல்லா ஒடிஸி ரயிலில் பயணித்த ஆஸ்திரேலிய நாட்டு சுற்றுலாப் பயணி ஒருவர், செல்ஃபி எடுக்க ரயில் நடைமேடையில் தொங்கியபோது, இரும்பு கம்பத்தில் மோதி ரயிலில் இருந்து விழுந்து காயமடைந்து நுவரெலியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக ரயில்வே துறை தெரிவித்துள்ளது.

மலையக ரயில் பாதையில் நானுஓயா மற்றும் அம்பேவெல ரயில் நிலையங்களுக்கு இடையில், திங்கட்கிழமை(31) மாலை



நடந்த இந்த விபத்தில் காயமடைந்த பெண், 27 வயதுடைய ஆஸ்திரேலிய சுற்றுலாப் பயணி ஆவார்.

அவர் ஆஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு வந்து கொழும்பு கோட்டையிலிருந்து பதுளைக்கு பயணித்த எல்ல ஒடிஸி ரயிலில் எல்லவுக்குப் பயணம் செய்து கொண்டிருந்தார்.

அவர் மற்ற சுற்றுலாப் பயணிகள் குழுவுடன் எல்லாவுக்குப் பயணம் செய்து கொண்டிருந்தபோது, ரயிலின் கதவிலுள்ள படிக்கட்டுகளில் தொங்கி செல்ஃபி எடுக்க முயன்றபோது, ரயில் பாதைக்கு அருகில் இருந்த இரும்புக் கம்பத்தில் மோதி, ஓடும் ரயிலில் இருந்து விழுந்ததாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.


பெண்ணின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஹப்புத்தளை பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## "சமூக ஊடகங்களில் மூழ்கும் பெற்றோர்"

பெற்றோர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி டிஜிட்டல் உலகில் உலாவி வருவதால் பிள்ளைகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் சுகாதாரம் மற்றும் போசாக்கு பிரிவின் பணிப்பாளர் கங்கா தில்ஹானி தெரிவித்தார்.

பல பெற்றோர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி டிஜிட்டல் திரைகளுக்கு அடிமையாகி உள்ளதால், இந்த நேரத்தில் தங்கள் பிள்ளைகளின் வீட்டுப் பாடங்களையும், படிப்பையும் புறக்கணித்து விடுவதாக கூறினார்.



இதேவேளை, தனிமையில் வாழும் பெண் பிள்ளைகளின் சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் தகவல்கள் வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

## போதைப்பொருள் வர்த்தகர் ஐஸுடன் கைதானார்

■ ரீ.எல்.ஜவ்பர்கான், கனகராசா சரவணன்

மட்டக்களப்பு- காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நூராணியா பிரதேசத்தில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் தேடுதலின் போது, 10 கிராம் 420 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருட்களுடன் பிரபல போதைப் பொருள் வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.எம்.ஐ.ரத்னாநாயக்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலித் லீலி ரத்னவின் வழிகாட்டலில் காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர் எம் ரத்னநாயகாவின் தலைமையில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போதே நூராணியா மையவாடி வீதியில் ஐஸ் விற்பனையில் ஈடுபட்டிருந்த போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட வர்த்தகரிடம்



இருந்து 10 கிராம் 420 மில்லி கிராம் ஐஸ், 10,700 ரூபாய் பணம், 5 வங்கிகளின் அட்டைகள், போதைப் பொருளை நிறுக்கும் பிரிக்கும் இயந்திரம், கைப்பை உட்பட பல பொருட்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட உள்ளதாக தெரிவித்த காத்தான்குடி பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.


## யுவதியின் சடலம் மீட்பு

■ கௌசல்யா

டயகம- அக்கரபத்தனையில் போட்மோர் தோட்டத்தில் இருந்து காணாமல் போன காளிமுத்து மகாலெச்சுமி (வயது 21) என்ற யுவதியின் சடலம் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் இருந்து செவ்வாய்க்கிழமை (01) அன்று கண்டெடுக்கப்பட்டதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டில் இருந்த யுவதியை, கடந்த 3 நாட்களாகக் காணவில்லை என யுவதியின் பெற்றோர் டயகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த நிலையில், மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ரயில் பாலத்தின் அருகே அடையாளம் தெரியாத பெண் சடலம் மிதப்பதாக உள்ளூர் வாசிகள் தலவாக்கலை பொலிஸாருக்கு வழங்கிய தகவலைத் தொடர்ந்து,



சடலம் மீட்கப்பட்ட பின்னர் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

காதல் தொடர்பு காரணமாக யுவதி தனது வீட்டிலிருந்து காணாமல் போனதாக யுவதியின் உறவினர்கள், டயகம பொலிஸில் அளித்த புகாரில் கூறப்பட்டுள்ளது.

நீர்த்தேக்கத்திலிருந்து மீட்கப்பட்ட சடலம், பிரேதப் பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனையின் சிறப்பு தடயவியல் நிபுணரிடம் அனுப்பப்பட்டுள்ளது.

சடலம் குறித்து டயகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 6,000 பொலிஸார் உஷார்

பண்டிகைக் காலத்தில் கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதற்காக சுமார் 6,000 பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள் எனவும் கூறியுள்ளனர்.

பொலிஸாருக்கு மேலதிகமாக, இலங்கை இராணுவம் மற்றும் சிறப்பு அதிரடிப் படை (STF) ஆகியவற்றின் பணியாளர்களும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக உதவுவார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

வீதித் தடுப்புப் பணிகளில் இராணுவம் கவனம் செலுத்தும், அதே நேரத்தில் பொலிஸாருக்கு சிவில் உடையில் நிறுத்தப்பட்டு, பாதுகாப்புப் பணிகளுக்காக ஆயுதம் ஏந்தியிருப்பார்கள் என்றும் தெரிவித்துள்ளனர்.



## மியன்மருக்கு செல்லும் இலங்கை மருத்துவக் குழு

மியன்மாரில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவி வழங்குவதற்காக இலங்கை மருத்துவக்குழு ஒன்றை மியன்மருக்கு அனுப்பத் தயாராக இருப்பதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

தேவையான அனுமதியை மியன்மார் அரசாங்கம் வழங்கியவுடன், அனர்த்த மீட்புப் பணிகளில் அனுபவமுள்ள விசேட மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் உள்ளடங்கிய மருத்துவ நிபுணர்கள் குழு ஒன்று தயாராக இருப்பதாக சுகாதார அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். களுத்துறையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார். மேலும், மியன்மாருக்கு அத்தியாவசிய மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் தேவையான பொருட்களை அனுப்பிவைப்பதற்கு அரசாங்கம் தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

அவற்றுக்கு மேலதிகமாக களத்தில் உதவி வழங்க விசேட மருத்துவக் குழு ஒன்றை நாங்கள் நியமித்துள்ளோம் என தெரிவித்துள்ளார்.

## சரத்துக்கு மரண தண்டனை

கொழும்பு பொரளை பிரதேசத்தில் 2014ஆம் ஆண்டு ஒருவரை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றார் என குற்றஞ்சாட்டப்பட்டிருந்த கே.எம்.சரத் பண்டார என்றழைக்கப்படும் எஸ்.எப்.சரத்தை குற்றவாளியாக இனங்கண்ட கொழும்பு மேல் நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

நீண்ட விசாரணையின் பின்னர், மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

இந்த வழக்கின் இணை குற்றவாளிகளாக கருதப்பட்ட தெமட்டகொட சமிந்த என அழைக்கப்படும் சமிந்த ரவி



ஜயநாத் ஆகிய 3 பேரை விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொரளை வனாத்தமுல்ல பகுதியில் உள்ள அழகு நிலையம் ஒன்றில் கடந்த 2014 ஆகஸ்ட் 1ஆம் திகதியன்று ஹெட்டியாராச்சிகே துமிந்த என்ற நபரை சுட்டுக் கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில், இந்த நால்வருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





## "சேர்ந்து பயணிப்போம்"

"எங்களால் முடியும் சேர்ந்து பயணிப்போம் உரிமையை வென்றிடுவோம்" எனும் தொனிப் பொருளில் கிராமங்களிலுள்ள பெண்கள் இணைந்து விழிப்புணர்வு ஊர்வலத்தை நடத்தி முடித்தனர்.

மட்டக்களப்பு வவுணதீவுப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கன்னன்குடா தொடக்கம் காஞ்சிரங்குடா வரையிலான 8 கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள பெண்களால் உருவாக்கப்பட்ட கொத்தணி அமைப்புக்கள் ஒன்றிணைந்து இந்த விழிப்புணர்வு நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

53 சுய உதவிக்குழுக்களில் இருந்து 650 க்கு மேற்பட்ட உறுப்பினர்களின் பங்களிப்புடன் நிகழ்வு நடந்தேறியது.

"தன்னம்பிக்கையும் ஒற்றுமையும் பெண் சமுதாயத்தின் பொக்கிஷம், தனியாக இல்லாமல் ஒன்றாக இணைந்து கனவு காண்பதால் கனவை மெய்ப்பிக்கலாம், பெண் வலிமையான சக்தி அவளை அடக்க முடியாது, பெண்ணின் கனவுகள் வரம்பெற்றவை." உள்ளிட்ட இன்னும் பல பெண்களின் உரிமைகள் தொடர்பான பல்வேறு வாசகங்களை எழுதிய விழிப்புணர்வுப் பதாதைகளை ஏந்திய வண்ணம் ஊர்வலமாக வருகை தந்து இந்தப் பொது நிகழ்வு இடம்பெற்றது.

இதில் கொத்தணிகளின் விழிப்புணர்வு தெரு நாடகம், கவிதைகள், கொத்தணிகள் தொடர்பான அறிமுக உரை போன்ற பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் உள்ளூர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் அலுவலர்களும் கலந்து கொண்டர்.

– ஏ.எச்.ஏ.ஹுஸைன்














# சமூக ஊடகங்களின் தாக்கமும் இளைய தலைமுறையும்

சமூக ஊடக பயன்பாடு இன்று உலகில் மிகவும் பிரபலமான தொடர்பு ஊடகங்களில் ஒன்றாக மாறியுள்ளது என்பது இரகசியமல்ல. அதனால்தான் இது தொடர்பாகப் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன, அதே போல் அதன் விளைவாக எழுந்துள்ள சிக்கல்களும் உள்ளன. எனவே, சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவது குறித்து பலருக்கு இன்னும் நேர்மறையான அணுகுமுறைகள் இல்லை என்பது தெளிவாகிறது.

ஆதி மனிதன் படிப்படியாக நாகரிகத்திற்கு மாறும்போது, தகவல்களைப் பெறுவதற்கான தொடர்பு வழிமுறைகள் உருவாகத் தொடங்கின. 21ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இணையம் ஊடக உலகிற்குப் பங்களித்தது, முழு உலகத்தையும் ஒரு உலகளாவிய கிராமமாக மாற்றியது.

இளைய தலைமுறையினரின் எண்ணங்கள், அணுகுமுறைகள் மற்றும் கருத்துக்களுடன் இணையத்தின் உள்ளடக்கமும் மாறி வருகிறது, இவை நாளுக்கு நாள் மாறி வருகின்றன. இணையம் தகவல் சமூகத்தின் மிக முக்கியமான அம்சமாக இருந்தாலும், அந்தத் தகவல் மூலம் சமூகத்தின் தார்மீக அம்சங்களுக்கு நீதி நிலைநாட்டப்படுகிறதா? என்பது ஒரு கேள்வி.

இணையம் மூலம் பெறப்படும் பல்வேறு உள்ளடக்கங்களும் சேவைகளும் இளைய தலைமுறையினரிடையே மனக் குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றன. இணையம் ஒரு புதிய ஊடகமாக சமூக முன்னேற்றத்தில் பெரும் பங்காற்றியிருந்தாலும், அது இளைஞர்கள் ஒழுக்கக்கேடான செயல்களில் ஈடுபடுவதற்கு அதிகளவில் வழிவகுத்துள்ளது.

கற்பனையான பெயர் மற்றும் கற்பனை பின்னணியுடன் ஒரு கற்பனை கதாபாத்திரத்தை யார் வேண்டுமானாலும் உருவாக்கும் திறன் சமூக ஊடகங்கள் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த சமூக ஊடகங்களால் இளைஞர் தலைமுறை பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆளாகியுள்ளது, மேலும் உலகில் ஒவ்வொரு 40 நிமிடங்களுக்கும் இந்த சமூக வலைப்பின்னல் சேவைகள் தொடர்பான குற்றங்கள் நடப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த சூழ்நிலைகளை எதிர்கொள்வதன் மூலம், எதிர்கால உலகின் பாதுகாவலர்களாக மாறவிருக்கும் இளம் தலைமுறையினர் படுகுழியில் விழுவதற்கான வாய்ப்புகள் அதிகம். இதனால், பெரும்பாலான இளைஞர்கள் இணையம் காரணமாக சிதைந்த மனதுடன் சமூக விலகலை நோக்கித் திரும்புவது அதிகரித்து வருகிறது.

இணையம் பிரபலமான கலாச்சாரத்திற்கான முதன்மை வாகனமாக மாறிவிட்டது. புதிய மொழி, மரபுத்தொடர்கள் மற்றும் நாகரீகங்கள் இணையம் மூலம் இளம் மனங்களைக் கவர்கின்றன, மேலும் அவை உருவாக்கும் சோதனைகள் சில நேரங்களில் இளம் தலைமுறையின் அழிவுக்கு வழிவகுக்கும்.

இணையம் என்பது நல்லது கெட்டது இரண்டையும் உள்ளடக்கிய புத்தகங்களின் தொகுப்பாகும். இணையத்தில் கிடைக்கும் விஷயங்களால் பாதிக்கப்படும் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள், செயற்கையான உளவியல் கண்ணோட்டத்தில் சமூகத்தைப் பார்க்கிறார்கள்.

சமூகம் மற்றும் தனிநபரின் உடல் வளர்ச்சியுடன், ஆன்மீக வளர்ச்சியும் இருக்க வேண்டும். எனவே, சமூக ஊடகங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால், தகவல்களைப் பரப்புவதன் மூலம் இளைய தலைமுறையினரின் விழிப்புணர்வை விரிவுபடுத்துவதாகும். மாறிவரும் உலகத்திற்கு ஏற்ப நாமும் மாற வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் அந்த மாற்றம் உலகளாவிய கிராமத்தின் வழியாக வரும் ஒவ்வொரு குப்பைக் குவியலையும் நாம் தழுவுவதாக இருக்கக்கூடாது.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு

எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

நம்மவர்களில் பலர் நாட்டை விட்டு வெளியேறி, அந்நிய நாடுகளுக்கு சென்று, அங்கேயே வாழ்வதால், வாழ்க்கையின் நடைமுறைகள், கலாசாரங்கள் மாறிவிடுகின்றன.

சிலர், தமது தாய் மொழியைக் கொச்சையாகப் பேசி, தாம் குடியேறிய நாடுதான் தமது தாய்நாடு போல தங்களை மாற்றி விடுகின்றார்கள். அவர்களின் பிள்ளைகளும் தமது தாய் மொழியின் வனப்பு, பேச்சின் தன்மை எதுவும் புரியாது, குடியேறிய நாட்டின் மொழியே தமது தாய் மொழி என எண்ணிக் கொள்கின்றார்கள்.

தாய் நாட்டுக்கு வந்தால், பேரன், பேத்தியுடன் தாய்மொழியில் பேசமுடியாது போக, பெற்றோர் மொழி பெயர்ப்பாளராக மாறிவிடுகின்றனர்.

தான் குடியேறிய நாட்டுக்கு விசுவாசமாகவும் அந்த நாட்டின் மொழியை கசடறவும் கற்று பேசவும் வேண்டும். அதற்காகத் தாய் மொழியை மறந்து விட வேண்டுமா? தாய் மொழியை ஒருபோதும் மறவாதீர்கள்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்



எம்.எஸ்.எம். ஐயூப்

### பயங்கரவாத தடை சட்டத்தை பாவிக்க

# NPPக்கு தார்மிக உரிமை உண்டா?

கடந்த 46 ஆண்டுகளாக பல நூறு குடும்பங்களின் எதிர்க்காலத்தை சீர்குலைத்த பயங்கரவாத தடைச் சட்டமும், சர்வதேச குடிசார் மற்றும் அரசியல் உரிமைகள் ஒப்பந்தச் சட்டமுமே இலங்கையில் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளாலும் பதவியில் உள்ள அரசியல்வாதிகளாலும் மிகவும் மோசமாக துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சட்டங்களாகும்.

பிரிவினைவாதிகள் என்றோ பிரிவினைவாதத்துக்கு உதவினார்கள் என்றோ குற்றஞ்சாட்டப்பட்ட பல்லாயிரக் கணக்கான தமிழர்களினதும் அவர்களது உறவினர்களினதும் வாழ்க்கை பொலிஸாராலும் அரசியல்வாதிகளாலும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலம் மிக மோசமாக சீர்குலைக்கப்பட்டுள்ளது.

பல நூறு தமிழ் இளைஞர்கள் இச்சட்டத்தைப் பாவித்து வருடக் கணக்கில் அல்ல தசாப்தக் கணக்கில் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களில் சிலர் இப்போதும் சிறைகளில் தவித்துக்கொண்டு இருக்கின்றனர்.

தமது வயதைப் பார்க்கிலும் நீண்ட காலமாக சில தமிழர்கள் எவ்வித குற்றச்சாட்டும் இல்லாமல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டு இருப்பதாக 2021ஆம் அப்போதைய ராஜாங்க அமைச்சரான நாமல் ராஜபக்ஷ வெலிக்கடை சிறைச்சாலையைப் பார்த்து விட்டு வந்து பாராளுமன்றத்தில் கூறினார். அப்போது அவருக்கு வயது 35 ஆக இருந்தது. ஆனால், அவரது அரசாங்கம் அதற்குப் பின்னராவது அக்கைதிகளை விடுதலை செய்ய எதனையும் செய்யவில்லை.

ஆயினும், பிரிவினைவாத போராட்டத்தின் தலைவர்களாக இருந்து படையினரை மட்டுமல்லாது, சாதாரண சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களையும் கொடூரமான முறையில் படுகொலை செய்யக் கட்டளையிட்ட புலிகள் அமைப்பின் சில தலைவர்கள், அரச அனுசரணையுடன் சுகபோக வாழ்க்கையை நடத்தினர். சிலர் இன்னமும் அரச விருந்தாளிகளாக இருக்கின்றனர். இது எவ்வளவு பெரிய அக்கிரமம்?

தமிழர்களின் எண்ணிக்கையில் இல்லாவிட்டாலும், பல முஸ்லிம் மற்றும் சிங்கள இளைஞர்களும் பயங்கரவாத தடைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் மற்றும் ஆசிரியர் அஹ்னாப் ஜசீம் அவர்களில் மிகவும் பிரசித்தி பெற்றவர்களாவர்.

சுருக்கமாகப் பலரால் ICCPR என்றழைக்கப்படும் குடிசார் மற்றும் அரசியல் உரிமைகள் ஒப்பந்தம் (International Civil and political; convention Act) 1966ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச் சபையால் நிறைவேற்றப்பட்டு 1976ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது.

அதனை தமது உறுப்பு நாடுகள் தத்தமது வரையறைகளுக்குள்; சட்டமாக்க வேண்டும் என்று ஐநா எதிர்பார்த்தது. அதன் பிரகாரம் இலங்கையில் அது 2007ஆம் ஆண்டு சட்டமாக்கப்பட்டது.

பல்வேறு நாடுகளில் வாழும் சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவே அவ்வொப்பந்தம் வகுக்கப்பட்டது. ஆனால் இலங்கையில் அது சிறுபான்மையினருக்கு எதிராகவே பாவிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் அதுவும் பயங்கரவாத தடைச் சட்டத்தைப் போலவே துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. ஒரு முறை விகாரைகளில் நடைபெறும் சில நடவடிக்கைகளை சிறுகதையாக எழுதிய ஒரு சிங்கள எழுத்தாளருக்கு எதிராகவும் அது பாவிக்கப்பட்டது. மற்றொரு முறை அது ஒரு ஏழை முஸ்லிம் பெண்ணுக்கு எதிராகப் பாவிக்கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதல் இடம்பெற்ற 2019ஆம் ஆண்டு மஹியங்கனை பிரதேசத்தில் ஹசலக்க என்ற கிராமத்தைச் சேர்ந்த அப்பெண் வண்டிச் சில்லை பொறித்த ஆடையொன்றை அணிந்து வீதியில் செல்லும் போது அவர் புத்தரின் தர்ம சக்கரத்தை அவமானப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டார். அவருக்கு எதிராக பொலிஸார் ICCPR சட்டத்தையே பாவித்தனர். பின்னர் அவர் விடுதலை செய்யப்பட்ட போதிலும் அது வரையிலான காலத்தில் அவரும் அவரது குடும்பமும் வெகுவாக பாதிக்கப்பட்டனர்.

இரண்டு கிளர்ச்சிகளில் ஈடுபட்ட மக்கள் விடுதலை முன்னணியும் பயங்கரவாத தடைச் சட்டத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. அக்கட்சி ஆரம்பத்திலிருந்தே அச்சட்டத்தை எதிர்த்து வந்துள்ளது. தாம் பதவிக்கு வந்தால் அதனை இரத்துச் செய்வோம் என்றும் உறுதியளித்தது. எனினும், அக்கட்சியை மையமாகக்கொண்ட தேசிய மக்கள் சக்தியே இப்போது பதவியியல் இருக்கிறது. இந்த அரசாங்கமும் பல சந்தேக நபர்களுக்கு எதிராகப் பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பாவித்து வருகிறது. அதேவேளை தாம் இந்த சட்டத்தை எதிர்ப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்கள் இன்னமும் கூறி வருகிறார்கள்.

கிழக்கு மாகாணத்தில் அறுகம்பே பிரதேசத்தில் சில இஸ்ரேலிய உல்லாசப் பிரயாணிகள் சட்ட விரோதமான முறையில் தமது சமயத் தளமொன்றை நிறுவி வழிபட்டு வந்த நிலையில் அதற்கு எதிராக கடந்த ஒக்டோபர் மாதம் பிரதேச மக்கள் குரலெழுப்பினர். அத்தோடு, பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்றும் எனவே அங்கே செல்ல வேண்டாம் என்றும் அமெரிக்க அரசாங்கம் தமது பிரஜைகளை எச்சரிக்கை செய்தது.

இதனை அடுத்து, இஸ்ரேலிய உல்லாச பிரயாணிகளுக்கு எதிராக செயற்பட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிலர் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு எதிராகவே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முதன்முதலாக பயங்கரவாத் தடைச் சட்டத்தைப் பாவித்தது. பயங்கரவாத தடைச் சட்டத்தை எதிர்த்த மக்கள் விடுதலை முன்னணி இவ்வாறு செய்ததைப் பலர் விமர்சித்தனர்.

அதற்கு பதிலளித்த வெளிநாட்டமைச்சர் விஜித்த ஹேரத், தாம் பயங்கரவாத தடைச் சட்டத்தை எதிர்த்த போதிலும், புதியதோர் சட்டத்தைக் கொண்டு வரும் வரை பயங்கரவாத செயற்களுக்கு எதிராக தற்போது அமுலில் உள்ள சட்டத்தையே பாவிக்க நேரிடும் என்றார்.

பயங்கரவாத செயல்களை முறியடிக்க வேறு எத்தனையோ பல சட்டங்கள் இருக்கின்றன என்பது முன்னர் மக்கள் விடுதலை முன்னணி முன்வைத்த ஒரு வாதமாகும். அந்த வாதம் இப்போது செல்லுபடியாகவில்லை போலும்.

தற்போது பொலிஸார் மற்றொரு இளைஞரையும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்துள்ளனர். இஸ்ரேலியர்கள் காவில் மேற்கொண்டு வரும் பலஸ்தீன இன அழிப்புக்கு எதிராக ஸ்டிக்கர் ஒன்றை கொழும்பு கொம்பனித் தெருவில் உள்ள கட்டிடமொன்றில் ஒட்டியதை அடுத்தே அவர் கடந்த மார்ச் 22ஆம் திகதி கைது செய்யப்பட்டார். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் பயங்கரவாத தடைச்சட்டம் பாவிக்கப்பட்ட இரண்டு சம்பவங்களிலும் இஸேரலர்களுக்க எதிராக செயற்பட்டவர்களைக் குறிவைத்தே அச்சட்டம் உபயோகிக்கப்பட்டுள்ளது என்பது முக்கியமான விடயமாகும்.

இரண்டாவது சம்பவத்தை அடுத்து, அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதனைத் தொடர்ந்து கடந்த 30ஆம் திகதி அறிக்கையொன்றை வெளியிட்ட பொலிஸார் அந்நபர் ஸ்டிக்கர் ஒட்டியதற்காகக் கைது செய்யப்படவில்லை என்றும் ஸ்டிக்கர் சம்பவத்தை அடுத்து அவரைப் பற்றி விசாரித்ததில் அவர் தீவிரவாத கருத்துடையவர் என்பது தெரிய வரவே அவர் கைது செய்யப்ட்டார் என்றும் கூறினர். அவரிடம் இருந்த தீவிரவாத கருத்து என்ன என்பதை பொலிஸார் குறிப்பிடவில்லை.

அவ்விளக்கத்தை நாம் ஏற்றாலும், இங்கே எழும் கேள்வி என்னவென்றால் காசா இன அழிப்பை அரசாங்கம் எதிர்ப்பதாக இருந்தால் அவ்வின அழிப்பை எதிர்த்து ஸ்டிக்கர் ஒட்டியவரைப் பற்றி பொலிஸார் ஏன் விசாரணை நடத்த வேண்டும் என்பதாகும். அதேபோல, பயங்கரவாத தடைச் சட்டத்தை 46 வருடங்களாக எதிர்த்து வரும் மக்கள் விடுதலை முன்னணியின் அரசாங்கத்தின் கீழ் சந்தேக நபர்களுக்கு எதிராக அச்சட்டத்தை எவ்வாறு பாவிக்க முடியும் என்பதும் முக்கிய கேள்வியாகும்.

மிகக் கொடூரமான சட்டமாகக் கருதப்படும் பயங்கராத தடைச் சட்டத்துக்குப் பதிலாகப் பயங்கரவாத செயல்களைக் கையாள்வதற்காக சர்வதேச தரத்திலான சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதாக அரசாங்கம் ஐ.நா. மனித உரிமை பேரவைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் வாக்குறுதி அளித்துள்ளது. அதன் பிரகாரம், 2018ஆம் ஆண்டு அப்போதைய ஐக்கிய தேசிய கட்சித் தலைமையிலான அரசாங்கம் பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கான சட்டம் ((Counter Terrorism Bill) என்ற சட்ட மூலத்தை முன்வைத்தது. 2019ஆம் ஆண்டு அரசாங்கம் மாறியதை அடுத்து அது இரத்துச் செய்யப்பட்டது.

2013ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கமும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் (Anti-Terrorism Bill) என்ற சட்ட மூலத்தை முன்வைத்தது. இந்த இரண்டும் ரணில் விக்ரமசிங்க பதவியில் இருக்கும் போதே முன்வைக்கப்பட்டன. முதல் சட்ட மூலம் அவர் பிரதமராக இருக்கும் போதும் இரண்டாவது சட்ட மூலம் அவர் ஜனாதிபதியாக இருக்கும் போதும் முன்வைக்கப்பட்டன. இரண்டும் தற்போதைய பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பார்க்கிலும், மோசமானவை எனக் கூறிய ஐநா மனிய உரிமை பேரைவை உள்ளிட்ட உள்நாட்டு மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் அவற்றை நிராகரித்தன.

தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் தயவால் உயிரை மட்டும் காப்பாற்றிக்கொள்ளும் நிலையில் இருக்கும் அரசாங்கம் ஐரோப்பிய நாடாளுமன்றம் 2021ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி இலங்கையின் பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பற்றி நிறைவேற்றிய பிரேரணையை மனதில் இருத்திக்கொள்ள வேண்டும். அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பாகவும் அதன் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாகவும் திருப்திகரமாக நடவடிக்கை எடுக்காவிட்டால் இலங்கைக்கு வழங்கப்படும் ஜீ.எஸ்.பி. வரிச் சலுகையை இருத்துச் செய்ய நேரிடும் என்று அப்பிரேரணையில் எச்சரிக்கப்பட்டு இருந்தது.

தமது தார்மிக கடமையைப் பற்றி அக்கறையில்லாவிட்டால் அரசாங்கம் மிகவும் மோசமான பொருளாதார நிலையை எதிர்நோக்கியிருக்கும் தற்போதைய நிலையில் குறைந்தபட்சம் இந்த அச்சுறுத்தலைப் பற்றியாவது சிந்தித்து செயலாற்ற வேண்டும்.

## கடிதங்கள்


### அமர முடியாத இருக்கைகளால் அசௌகரியம்

வடமாகாணத்தின் பிரதான நுழைவாயிலாகவும், பல மாவட்டங்களில் இருந்து வந்து செல்வோர் அதிகமாகக் கூடும் இடமாகவும் உள்ள வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் உள்ள இருக்கைகள், பயணிகள் அமர முடியாதவாறு உடைந்து, பழுதடைந்து காணப்படுவதுடன் அதில் அமருபவர் விழும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதனால், பஸ்கள் வரும் வரையிலும் பயணிகள் நின்றுகொண்டிருக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது . நீண்ட நேரம் எழுந்து நிற்க முடியாதவர்கள் குறித்த இருக்கையில் அமரும் போது உடலில் காயங்கள் ஏற்படுவதாகவும், இருக்கைகளில் இருந்து விழும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் இது தொடர்பாக உரிய அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

க.அகரன்



# உலக ஆட்டிச விழிப்புணர்வு தினம்



பரமநாதன் சிவ கௌரி,
மூன்றாம் வருடம் உளவியல்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

உலக அளவில் அதிகரித்துவரும் மனநோய்களுள் ஒன்றாக ஆட்டிசம் (Audisim) காணப்படுகிறது. இந்நோய் அதிகஅளவில் சிறுவர்களுக்கு ஏற்படுகிறது. இது குழந்தைகளின் நரம்பு மண்டலத்தில் ஏற்படும் வளர்ச்சி குறைபாடு ஆகும். உலக அளவில் 100 பேரில் ஒருவருக்கு இந்நோய் ஏற்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றது. அதிகளவில் அமெரிக்க குழந்தைகளுக்கு இந்நோய் ஏற்படுகிறது. இலங்கையைப் பொறுத்தவரை இது வேகமாக அதிகரித்து வரும் நோயாகக் காணப்படுகின்றது.

1943 டாக்டர் லியோகார்னர் என்பவர் முதன் முதலில் ஆட்டிசம் எனும் வார்த்தையைப் பயன்படுத்தினார். இவர் பாசமான தொடர்பை ஆட்டிசம் சிதைக்கும் என *Autistic Disturbances of Affective contact* ஆய்வறிக்கையில் வெளியிட்டார். முதன் முதலில் இவரே ஆட்டிசம் தொடர்பாகப் பேசியவராகக் கருதப்படுகின்றார்.

அமெரிக்க உள மருத்துவ சங்கம் 1952 ஆம் ஆண்டில் உளநோய் நிர்ணய புள்ளி விபரகையேட்டை உருவாக்கி மனிதர்களது உளநோய் தொடர்பான விடயங்களை வெளியிட்டது .இதன் தொடர்ச்சியாக 1994 உளநோய் நிர்ணய புள்ளி விபரகையேடு நான் கினை வெளியிட்டது . அதில் ஆட்டிசம் நோய் தொடர்பான விடயங்கள் கூறப்பட்டுள்ளது. இக்கையேடுஎமில் கார் மிலன் உடையமுயற்சியில் 297 நோய்களைக் கொண்ட 886 பக்கங்களைஉடையபுத்தகம் DSM4 கையேடு வெளியிடப்பட்டது.

ஆட்டிசம் நோயை மருத்துவ மொழியாக *Autism Spectrum disorder* என அழைப்பார்கள். இதனைத் தமிழில் தன்னாள் வகுறைபாடு இமன இறுக்கம் எனவும் அழைப்பார்கள் . DSM4 இல் இந்நோயினை idPDD என அழைப்பதோடு இந்நோய் ஐந்து வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றுள் ஆட்டிசம் குறைபாடு, ஆஸ்பொஜரின் கோளாறு, குழந்தைப் பருவ சிதைவு கோளாறு, ரெட்ஸ் நோய்க்குறி என்பன உள்ளடங்கும்.

ஆட்டிசமானது இயல்பு நிலையைப் பாதிக்கும் ஒரு நோயாகக் காணப்படுகின்றது. இது சமூக தொடர்பு, நடத்தை மாற்றத்துடன் தொடர்புடையது. ஆட்டிசம் நோய் குழந்தையின் பிறப்பிலிருந்து உருவாக்கப்படும் ஆனால் இது குழந்தை பிறந்து 18 மாதம் முதல் 24 மாத காலப்பகுதியில் இந்நோயினை கண்டறிய முடியும்.

இக்கால பகுதியில் குழந்தையின் உடல் இயக்க வளர்ச்சிகள் ஆரம்பித்து, அவர்கள் கைகள் கண்களை ஒருங்கிணைத்துக் குறிப்பிட்ட ஒலிகளுக்கு அசைவுகளை மேற்கொள்ளக் கூடியவர்களாகவும் வார்த்தைகளையும் பிரயோகிக்க முடியும். இவ்வாறான செயற்பாடுகளை ஆட்டிசம் குழந்தைகளால் செய்யமுடியாது.

ஆட்டிச குறைபாடு பெண்களை விட ஆண்களை அதிகம் தாக்குகின்றது. இதனது நிறமாக நீலநிறம் கருதப்படுகின்றது. ஆட்டிசம் நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஒரே மாதிரியாக இருப்பதில்லை பல வேறுபாடுகளைக் கொண்டிருப்பர். சிலர் பாடசாலை சென்று இயல்பான கல்வியைப் பெறுகின்றனர் .சிலருக்கு விசேடமான கல்வி மற்றும் பிறரில் தங்கி இருக்க வேண்டிய நிலை உருவாகும். இதனை ஆரம்பத்தில் கண்டறிவதன் மூலம் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ள முடியும் .

ஆட்டிச குறைபாடு மூன்று முக்கிய செயற்பாடுகளில் தாக்கத்தைச் செலுத்துகிறது. பேசுதல் மற்றும் தொடர்புகொள்வதிலும் மற்றவர்களுடன் பழகுவதிலும் , உணர்வுகளை ஒருங்கிணைப்பதிலும் பிரச்சனை ஏற்படும்.

ஆட்டிச குறைபாடு உடைய குழந்தைகளை அடையாளம் காண்பதற்குரிய அறிகுறிகளாக சரளமாகப் பேச முடியாது, இலகுவாகப் பழக முடியாது, மீண்டும் மீண்டும் ஒரே விடயத்தைச் செய்வார்கள், குறிப்பிட்ட பொருளைச் சுட்டிக்காட்ட இயலாமை,கதைகள் கேட்க விருப்பமின்மை, தனிமையாக இருப்பார்கள் ,வலிகளை உணராமல் இருப்பார்கள், தூக்கமின்மை, மற்ற குழந்தைகளோடு சேர்ந்து விளையாட மாட்டார்கள், கைகளை உதறிக் கொண்டிருப்பார்கள், பெயர் சொல்லி அழைத்தாலும் திரும்பமாட்டார்கள், ஒரு பொருளில் கவனம் செலுத்த முடியாது, ஒரே வார்த்தையைத் திரும்பத் திரும்ப சொல்வார்கள், பிறரின் கண்களை உற்று நோக்க முடியாது, வித்தியாசமான ஒலிகளை எழுப்புவார்கள், போல, செய்தல் தன்மை காணப்படாது, மந்தமான வளர்ச்சி போக்கு காணப்படும், சில குழந்தைகள் வன்முறை செயற்பாட்டிலும் ஈடுபடுவார்கள் இவ்வாறு பல செயல்பாடுகளை தன்னகத்தை கொண்டிருப்பார்களாக இருந்தால் அக் குழந்தைகள் ஆட்டிச குறைபாடு உடைய குழந்தைகள் என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

*The american academy of pediatrucs* அனைத்து குழந்தைக ளுக்கும் பதினெட்டு மாதம் முதல் 24 மாத காலப்பகுதிகளில் ASD பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் எனக் கூறுகின்றது. ஐக்கிய நாடுகள் சபை தொடக்கத்தில் இருந்தே மாற்றுத் திறனாளிகளின் நலனின் அக்கறையுடன் செயல்பட்டு வருகிறது அந்த வகையில் ஆட்டிசம் நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்கில் ஆண்டு தோறும் ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதி உலக ஆட்டிச நோய் விழிப்புணர்வு நாளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது .ஆண்டுதோறும் இத்தினம் வெவ்வேறு தொனிப்பொருளில் கொண்டாடப்படுகிறது. கடந்த ஆண்டில் ஆட்டிஸ்டிக் குரல்களை மேம்படுத்தல் எனும் தொனிபொருளில் கொண்டாடப்பட்டது.

ஆட்டிசம் நோய் ஏற்படுவதற்கான சரியான காரணங்களை கண்டறிய முடியாதுள்ளது. மருத்துவர்கள் கர்ப்பகாலத்தில் பாவிக்கப்படும் மருந்துகள், மரபியல் குறைபாடுகள் இரத்த உறவுகளில் திருமணம் செய்வது, காலம் தாழ்த்திய கர்ப்பம், போன்றவற்றோடு குறைப்பிரசவம் இகுறை எடை கொண்ட குழந்தைகள் பிறப்பது மற்றும் பெற்றோர்களின் முறையான பராமரிப்பு இன்மையினாலும் இந் நோய்கள் ஏற்படுவதாக கூறுகின்றனர்'

இந்நோயினை தடுப்பதற்குரிய வழிமுறைகளாக மருத்துவ சிகிச்சை பெறுதல் முதலிடம் பெறுகிறது .அதன் அடிப்படையில் இரண்டு வயதை எட்டிய பிள்ளைகளிடம் குறித்த வளர்ச்சி நிலை இல்லை என்றால் உடனடியாக குழந்தை மருத்துவர்கள், நரம்பியல் நிபுணர்கள் ,பேச்சு மொழியியல் நிபுணர்கள், குழந்தை மனநல மருத்துவர்களை சந்தித்து ஆலோசனை பெற வேண்டும்.

> **“ ஆட்டிசம் நோயை முறையான சிகிச்சை மூலம் கட்டுபடுத்தி அந்தக் குழந்தைகளுக்குரிய சிறப்பான எதிர்காலத்தை அமைத்து கொடுப்பதில் பெற்றோர்களினதும் சமூகத்தினதும் அரசினதும் மேலதிக பங்கு மிக முக்கிய மானதாக காணப் படுகிறது**

இன்றைய கால பெற்றோர்கள் பலர் பணியிடங்களுக்கு சென்று வேலை செய்பவர்களாகக் காணப்படுவதனால் குழந்தைகளைச் சரியான முறையில் பராமரிக்க முடியாதுள்ளதுடன், குழந்தைகளின் வளர்ச்சிகளைச் சரிவர அவதானிக்க முடியாது உள்ளது. இரண்டு வயதுக்குள் இந்நோயினை கண்டு பிடித்தால் உரிய சிகிச்சை அளித்து அவர்களுக்கான தனிப்பட்ட திறமைகளைக் கண்டறிந்து அதன் வழியில் அவர்களை வழி நடத்துவதன் மூலம் அவர்களுக்கான சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும்.

ஆட்டிச நோயாளர்களைக் குணப்படுத்துவதற்குரிய வழிகளாக அவர்களுடன் அதிக நேரத்தைச் செலவிட்டு அவர்களது பிரச்சினையைக் கண்டறிதல், அவர்களுக்கு ஏற்ற மகிழ்வான சூழலை அமைத்துக் கொடுத்தல், ஒரு பொருளில் கவனம் செலுத்துவதற்கு பயிற்சியளித்தல் இதோடு உணர்வை மேம்படுத்தும் விளையாட்டுக் களைபயிற்று வித்தல், பொருத்தும் பொருட்களை வழங்கி விளையாட வைத்தல் போன்ற வற்றோடு அசைவுகளை மேம்படுத்தும் நோக்கில் கோடுகீறி அதன் வழி நேராக நடக்கவைத்தல், சைக்கிள் ஓட கற்றுகொடுத்தல், நீந்துதல், ஏறுதல், கைதட்டிவிளையாடல், இசைக் கருவிகள் வாசிக்க பழக்குதல், இசை கேட்க வைத்தல், கயிறு இழுத்தல் போன்ற சிறிய சிறிய விளையாட்டுகளை விளையாட வைப்பதோடு சுற்றுப்புறச் சூழலில் ஏற்படும் மாற்றங்களை அவதானிக்க செய்தல், செயல்களைத் திறம்படச் செய்வதற்குரிய வழிகளை ஏற்படுத்தி கொடுத்தல், படங்களைப் பயன்படுத்திக் குறித்த விடயத்தை தெளிவுபடுத்தல், கவனத்தை சிதைக்கும் செயல்களிலிருந்து விலக்கி வைத்தல், மேலும் நேரான மாற்றத்தை ஏற்படுத்த முனைதல் , வெற்றிகளைக் கொண்டாடி அவர்களை உற்சாகம் ஊட்டல் , குழந்தைகளுக்கு மதிப்பு அளித்து அவர்கள் சொல்வதைக் கேட்டல், சவாலான தேவையற்ற நடத்தையைப் புறக்கணிக்கச் செய்தல், சுய கட்டுப்பாட்டு முறைகளை சொல்லிக் கொடுத்தல், மலசலக்கூட பாவனை மற்றும் ஆடை அணிவதற்கான பயிற்சி வழங்கல் , மேலும் இவர்களுக்கு கல்வி ரீதியான ஆதரவுகளையும் வழங்குவதோடு பல்வேறு பட்ட உளவியல் சிகிச்சைகளின் ஊடாக இவர்களது நடத்தைகளை கட்டுப்படுத்தி திறன்களை கண்டறிந்து அத்திறமைக்குரிய மேலதிக பயிற்சி அளித்து குறித்த துறையில் சாதனையாளர்களாக மாற்ற முடியும்.



ஆட்டிசம் நோயை முறையான சிகிச்சை மூலம் கட்டுபடுத்தி அந்தக் குழந்தைகளுக்குரிய சிறப்பான எதிர்காலத்தை அமைத்து கொடுப்பதில் பெற்றோர்க ளினதும் சமூகத்தி னதும் அரசினதும் மேலதிக பங்கு மிக முக்கிய மானதாக காணப் படுகிறது.



## பாடசாலை பழைய மாணவர் சங்கம்

# “சமூகத்தின் அவா”

செ.மதுஷானி,
விடுகை வருட கல்வியியல் சிறப்பு கற்கை மாணவி,
கல்வியியல், பிள்ளை நலத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்



கற்று முடித்த மாணவர்களை கற்றுக் கொண்ட பாடசாலையில் மீள ஒன்றிணைத்து, பாடசாலை மேம்பாட்டில் உள்ளீர்த்து, சீர்மிகு சமூக மயமாக்கலில் சிறந்த வளங்களை தக்க வைக்கிறது இன்றைய பழைய மாணவர் சங்கம்.

சமூகம், பாடசாலை தொடர்பில் பழைய மாணவர் சங்கத்தின் பங்களிப்பு இன்றியமையாதது. பழைய மாணவர் சங்கம் என்பது, ஒரு பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறிய பின்னர் தான் கற்ற பாடசாலை பௌதீக ரீதியாகவும், சிந்தனை ரீதியாகவும் வெற்றி கொள்வதற்கு பாடசாலை முகாமைத்துவத்துடன் இணைந்து செயல்படும் அமைப்பாகும்.

இச்சங்க அமைப்பிற்கு அதிபர் தலைவராக இருப்பார். பழைய மாணவர்கள் நிர்ணயிக்கப்பட்ட அங்கத்துவ பணத்தை வழங்கி தமது இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வர். ஆசிரியர்கள் பதவி வழி அங்கத்தவர்களாக காணப்படுவர். பழைய மாணவர் சங்கமானது இன்றைய சமூகத்தில் வலுவான நெடுவழி உறவுகளை பராமரிக்க உதவுகிறது. இது சாதாரண உறுப்பினர், ஆயுட்கால உறுப்பினர் என இரு வகையான உறுப்புரிமையின் கீழ் அமைந்திருக்கும்.

‘சமூக மயமாக்கல் என்பது கல்வியோடு தொடர்புடைய ஒரு செயல்முறையாகும்” என மஸ்க்ரேவ் குறிப்பிடுகின்றார். சமூக மயமாக்கல் என்பது சமூகத்தின் முன்னேற்றத்திற்கு தனி நபர்கள் மற்றும் அமைப்புகள் இணைந்து செயற்படுவதாகவும். அந்த வகையில், சங்கத்தின் மூலம் பழைய மாணவர்கள் ஒரு சமூகமாக அமைந்து பரஸ்பர உறவுகளை மேம்படுத்தி வருகின்றனர்.

பாடசாலையின் பல்வேறு செயற்பாடுகளுக்காக சமூகத்தின் பங்களிப்பை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவைப்பாடு இன்றைய காலகட்டத்தில் அதிகமாக காணப்படுகிறது. பாடசாலையில் அனுமதிக்க கூடிய மாணவர்களை விட கூடிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறும் பாடசாலைகளில் நேர்முகப் பரீட்சை குழுவின் கட்டமைப்புக்கு அமைவாக பழைய மாணவர் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் காணப்படுவது இவ்விடத்தில் சுட்டிக்காட்டப்பட வேண்டியதொரு விடயமாகும்.

பாடசாலையின் பல்வேறு செயற்பாடுகளுக்காக சமூகத்தின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவைப்பாடு இன்றைய காலகட்டத்தில் மிகவும் அதிகமாக காணப்படுகிறது. பழைய மாணவர் சங்கம் சமூக மயமாக்களுக்கு பல சேவைகளையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில், பழைய மாணவர் சங்கத்தின் பணிகளை நோக்குவோமாயின், சமூக முன்னேற்றங்கள் குறித்து விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி வருகிறது.

குறிப்பாக டெங்கு ஒழிப்பு, போதை வஸ்து பாவனை தடுத்தல், சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுத்தல், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் நிகழ்ச்சி திட்டங்கள் போன்றவற்றை குறிப்பிடலாம். மாணவர்களுக்குத் தொழில்துறை பயிற்சிகள், நேர்மறை உத்திகள் பற்றிய விளக்கங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. கற்றல் செயற்பாட்டிற்குத் தேவையான மேலதிக வகுப்புகள் இலவசமாக நடாத்துதல், தரம் ஐந்து, க.பொ சாதாரண தரம், க.பொ உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கான விசேட வகுப்புகளை ஒழுங்குபடுத்துதல், பாடசாலைகளில் சிறப்பாகச் சேவை புரிந்தவர்களுக்கு சேவை நலன் பாராட்டுகளை நடத்திக் கௌரவித்தல், பாடசாலை தினம் வாணி விழா என்பவற்றை ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடுவது போன்ற அளப்பரிய பணிகளை ஆற்றி வருகின்றன.

மேலும் குறிப்பிடுகையில் சிரமதானம் போன்ற சமூக பொது வேலைகளில் மாணவர்களையும், சமூகத்தினையும் இணைத்துக் கொண்டு செயற்படுதல், பாடசாலை சமூகத்துடன் பெற்றோரையும் பழைய மாணவர்களையும் ஒன்றிணைத்து புரிந்துணர்வின் ஊடாக ஒற்றுமைப்படுத்தி சீரான கல்வி செயற்பாட்டினை மேற்கொள்ளல், சமூகத்தில் தேவை உடையவர்களை இனங்கண்டு அவர்களுக்குரிய அரச அலுவலகங்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுடன் தொடர்பை ஏற்படுத்தி சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல், மாணவர்கள் பயன்பெறும் வண்ணம் பாடசாலை நிர்வாகத்தினரால் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு நல்குதல்,

பாடசாலை பௌதீக வளங்களில் காணப்படுகின்ற குறைபாடுகளை இயன்றவரை பூர்த்தி செய்து கொடுத்து கற்பித்தல் செயற்பாடுகளை முழுமையாக்குதல், யுத்தம் மற்றும் இயற்கையின் தாய் ,தந்தையை இழந்த மாணவர்களுக்கான ஆற்றுப்படுத்துகை செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல் போன்ற அளப்பரிய சேவைகளைப் பழைய மாணவர் சங்கம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

பாடசாலைகளில் சமூகத் தொடர்பை வலுவூட்டுவதற்காக விபரப் புத்தகமொன்று பேணப்பட்டு வருகிறது. பாடசாலை சமூகம் வளர்ச்சி அடைந்துள்ளதா? என்பதை நோக்குவதற்குப் பழைய மாணவர்களின் பதவி நிலை, வளர்ச்சி நிலை தக்க சான்றாக அமைகிறது. இவை சமுதாயத்தில் சிறந்த நன்மதிப்பை ஏற்படுத்துவதுடன், மாணவர்களையும் ஊக்கப்படுத்துகிறது. மேலும் பழைய மாணவர் அமைப்பானது சமூக வலைத்தளம் ஒன்றை உருவாக்கி தமது சேவைகளை சமூகத்திற்கும், உலகிற்கும் அறியத் தருவதுடன் ஏனைய உறுப்பினர்களும் வருகின்றனர். இவ்வாறு அதன் பணிகள் மென்மேலும் தொடர வேண்டும்.

அடுத்ததாகப் பழைய மாணவர்களின் உறுப்புரிமை இழக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களை நோக்குவோமாயின், அமைப்பின் விதிகளுக்கு முரணாகச் செயல்படுபவர்களை ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படுத்தி அதனூடாக எடுக்கப்படுகின்ற தீர்மானங்களுக்கு அமைவாக அமைப்பிலிருந்து நீக்கல், அமைப்பினால் அறிவிக்கப்படும் தினத்திற்குள் வருடாந்த சந்தாவினை செலுத்தாத சாதாரண அங்கத்தவர்களும் இரண்டு வருடத்திற்கான சந்தாவினை செலுத்தாத ஆயுட்கால அங்கத்தவர்களும் அங்கத்துவத்தை இழப்பர்.

அங்கத்துவத்தை இழந்த ஒருவர் மீண்டும் அங்கத்துவத்தை புதுப்பிப்பதற்குக் கோரும் பட்சத்தில் பொதுச் சபையில் தீர்மானிக்கப்படுகிற தண்டப் பணத்தையும் நிலுவையாக இருக்கும் சந்தாவினையும் செலுத்துதல் வேண்டும். அமைப்பின் சொத்துக்களை சேதம் விளைவிப்பது, திருடுவதும் பாரிய குற்றம்.

இவ்வாறு பல சேவைகளை ஆற்றி வருகின்ற பழைய மாணவர் சங்கம் சில சவால்களுக்கு மத்தியில் பாடசாலைக்குப் பல அர்ப்பணிப்புகளையாற்றி இற்றைவரை செயற்பட்டு வருகின்மை பாராட்டத்தக்கதொரு விடயமாகும். அந்த வகையில், சகல மாணவர்களும் சங்கங்களின் செயற்பாடுகளில் ஆர்வம் காட்டுவதில்லை. சங்கத்தின் செயற்பாடுகளுக்கான நிதியைத் திரட்டுவதில் சிக்கல் தன்மை காணப்படுகிறது.

அத்துடன், சில உறுப்பினர்களின் பங்கீடு குறைவாகக் காணப்படுகிறது. அனைத்து உறுப்பினர்களும் ஒன்றாக இணைந்து திட்டங்களை மேற்கொள்ளும் போது முரண்பாடுகள் ஏற்படுகிறது போன்ற சில குறைபாடுகளை குறிப்பிடுவது கவலைக் குரிய விடயமாகவே காணப்படுகின்றது. எனினும், இச் சவால்களை முறியடிப்பதற்கான சில செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இங்கு பழைய மாணவர்களின் பங்கு பெறுவதை ஊக்குவிப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தல், பொதுக்கூட்டம் வருடத்திற்கு ஒருமுறை கூட்டப்படுதல் வேண்டும், நிர்வாக கூட்டத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல், நிதி உதவிகளை மாற்று வழிமுறைகளின் ஊடாக பெற்றுக்கொள்ளல். உறுப்பினர்களுக்கு இடையே பரஸ்பர ஒற்றுமையை ஏற்படுத்துதல் போன்ற செயற்பாடுகளைக் குறிப்பிடலாம்.

எனவே, தொகுத்து நோக்கும்பொழுது பழைய மாணவர் சங்கம் பாடசாலையின் வளர்ச்சியில் சமூக மயமாக்கல் செயற்பாடுகளிலும் பாரிய பங்களிப்பினை செய்து வருகிறது. இந்த அமைப்பின் மூலம் சமூகத்திற்கு ஆற்றப்படும் சேவைகள் எண்ணிலடங்காதவை. எனினும் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுப்பதோடு அச்சவால்களை தடைத்தெரிந்து பல சாதனைகளைப் படைக்க முன்வர வேண்டும்.

எது எவ்வாறாயினும் பழைய மாணவர் சங்கங்கள் சமூகப் பொறுப்பில் மிக முக்கிய பங்காற்றுகிறது என்பதில் எவ்வித ஐயப்பாடுகளும் இல்லை. இன்றைய காலகட்டத்தில் இலங்கையின் சகல பாடசாலைகளிலும் பழைய மாணவர் சங்கம் அமைக்கப்பட வேண்டியது அத்தியாவசிய தேவை ஒன்றாகக் காணப்படுவதுடன், அதன் சேவைகளும் மேலும் வலுப்பெற வேண்டும் என்பது சமூகத்தின் அவாவாகும்.

அமெரிக்கா/ இந்தியா

### இந்தியாவில் அணு உலைகளை அமைப்பதற்கு

# ட்ரம்ப் அனுமதி

இந்தியாவில், அணு உலைகளை அமைப்பதற்கு, ஹோல்டெக் என்ற அமெரிக்கா நிறுவனத்திற்கு ட்ரம்ப் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இந்தியா-அமெரிக்காவுக்கு இடையே கடந்த 2007ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அப்போதைய இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கும் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ்ஷும் இணைந்து இந்த ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டனர்.

அதன்பின்பு இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரவில்லை.

கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கு பிறகு அணுசக்தி ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த அமெரிக்கா அனுமதி வழங்கியுள்ளது.

இந்தியாவில் அணு உலைகளை அமைப்பதற்கு ஹோல்டெக் என்ற அமெரிக்கா நிறுவனத்திற்கு ட்ரம்ப் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இருப்பினும், இந்தியாவும் அமெரிக்காவும் கூட்டாக இணைந்து உருவாக்கப்படும் அணு



மின் நிலையங்கள், அமெரிக்க அரசின் அனுமதி இல்லாமல் இந்தியாவிலோ அல்லது வேறு எந்த நாடுகளுக்கோ அல்லது அமெரிக்க நிறுவனத்தை தவிர வேறு எந்த நிறுவனத்துக்கோ மாற்றப்படக்கூடாது என்று, அமெரிக்கா இந்த ஒப்பந்தத்தில் நிபந்தனை விதித்துள்ளது.

இத்தாலி

### டெஸ்லா டீலர்ஷிப் விற்பனையகத்தில்

# தீ விபத்து: 17 கார்கள் தீக்கிரை

இத்தாலியின் ரோம் நகரில் உள்ள டெஸ்லா டீலர்ஷிப் விற்பனையகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 17 கார்கள் எரிந்து சேதமடைந்துள்ளது.

தீவிபத்து ஏற்பட்டபோது, விற்பனையகத்தில் யாரும் இல்லாததால் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

மேலும், தீ முழுவதும் அணைக்கப்பட்டு, தீ விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தீ விபத்து குறித்து டீலர்ஷிப் உரிமையாளர் மற்றும் விற்பனையகத்தில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி. கெமரா காட்சிகளை கொண்டு பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதனிடையே, டெஸ்லா கார் விற்பனையகத்தில் ஏற்பட்ட தீவிபத்து பயங்கரவாத தாக்குதல் என உலக பெரும் பணக்காரரான எலான் மஸ்க் குற்றம் சாட்டியுள்ளார்.

சமீபகாலமாக இத்தாலி முழுவதும் டெஸ்லா வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு வடக்கு ரோமில் உள்ள மற்றொரு கார் டீலர்ஷிப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் டெஸ்லா கார்கள் உட்பட 30 கார்கள் எரிந்து சேதமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பாகிஸ்தான்

### இம்ரான் கானுக்கு

# நோபல் பரிசு வழங்க பரிந்துரை

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு, அமைதிக்கான நோபல் பரிசு வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

நோர்வே அரசியல் கட்சியான பார்டியட் சென்ட்ரமின் சட்டத்தரணிகள் பிரிவு இந்த பரிந்துரையை வழங்கி இருக்கிறது.

இது தொடர்பாக அந்த கட்சி தனது எக்ஸ் தளத்தில்,

“பாகிஸ்தானில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு முன்னாள் பிரதமர் இம்ரான் கான் செய்த பணிகளுக்காக, அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்க பரிந்துரைத்து இருக்கிறோம்’ என கூறியுள்ளது.

நம்பிக்கை இல்லா தீர்மானம் மூலம் பதவியை இழந்த இம்ரான்கான் ஊழல் உள்ளிட்ட வழக்குகளில் கடந்த 2023ஆம் ஆண்டு முதல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக தெற்கு ஆசியாவில் அமைதியை ஏற்படுத்த இம்ரான்கான் மேற்கொண்ட பணிகளுக்காக கடந்த 2019ஆம் ஆண்டும் அவர் அமைதிக்கான நோபல் பரிசுக்கு பரிந்துரைக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.



இந்தியா

# நித்தியானந்தா இறந்து விட்டார்?

நித்தியானந்தா இறந்து விட்டார் என ஆன்மிக சொற்பொழிவு ஆற்றிக்கொண்டிருந்தபோது, அவருடைய சகோதரியின் மகன் கூறினார்.

‘கதவைத்திற காற்று வரட்டும்’ என்ற ஆன்மிக கட்டுரை எழுதியதன் மூலம் பிரபலமானவர் நித்தியானந்தா.

ஆனால், ஆபாச வீடியோ முதல் மதுரை ஆதினத்தின் இளைய மடாதிபதியாக அறிவித்துக்கொண்டது வரை பல்வேறு சர்ச்சைகளில் நித்தியானந்தா சிக்கியதால் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வந்தார்.

குஜராத் மாநிலம், ஆமதாபாத்தில் பதிவான ஒரு வழக்கில் பொலிஸார் தேடுவது தெரிந்தவுடன், இந்தியாவை விட்டு வெளியேறிய நித்தியானந்தா, தென் பசிபிக் கடலில் உள்ள தீவு ஒன்றுக்கு ‘கைலாசா’ என்று பெயர் வைத்துக்கொண்டு அங்கேயே தங்கி விட்டதாக கூறப்படுகிறது.

அங்கிருந்தே சொற்பொழிவுகளையாற்றி வந்த நித்தியானந்தா, நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டதாக 2022ஆம் ஆண்டு மே மாதம் பரபரப்பாக தகவல் பரவியது.

அதற்கு பதிலளித்த நித்தியானந்தா, 27 வைத்தியர்கள் தனக்கு சிகிச்சை அளித்து வருவதாகவும், மருத்துவ சிகிச்சையில் இருந்து தான் இன்னும் வெளியே வரவில்லை என்றும், பிரபஞ்சத்தின் சக்தியை என் உடல் எப்படி உள்வாங்கி செயற்படுகிறது என்பதை தனக்கு சிகிச்சை அளிக்கும் வைத்தியர்கள் ஆய்வு செய்து வருவதாகவும் பரபரப்பு கருத்தை வெளியிட்டார்.

மேலும், தான் சாகவில்லை என்றும், சமாதி மனநிலையை அடைந்திருப்பதாகவும், விரைவில் பரிபூரண நலம் பெற்று திரும்புவேன் என்றும் கூறியிருந்தார்.

அதன்பிறகு, கடந்த சில ஆண்டுகளாக வீடியோ எதிலும் நித்தியானந்தா தோன்றவில்லை. இடையிடையே சில வீடியோக்கள் வந்தாலும் அது பழைய வீடியோ என்றே கூறப்பட்டது.



இந்த நிலையில், கடந்த 2 நாட்களுக்கு முன்பு உடல் நலக்குறைவு காரணமாக நித்தியானந்தா உயிரிழந்து விட்டதாக தகவல் வெளியாகியிருக்கிறது.

நித்தியானந்தாவின் சகோதரியின் மகன் சுந்தரேஸ்வரன், ஞாயிற்றுக்கிழமை (30) அன்று காணொளி காட்சி மூலம் ஆன்மிக சொற்பொழிவு ஆற்றிக்கொண்டிருந்தபோது, இந்த அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளார்.

“இந்து தர்மத்தை காப்பதற்காக சாமி உயிர் தியாகம் செய்து விட்டார்" என்று கூறினார்.

இதனால், நித்தியானந்தாவின் பக்தர்கள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

உண்மையில் நித்தியானந்தா இறந்து விட்டாரா அல்லது வழக்கில் இருந்து தப்பிப்பதற்கான நித்தியின் புதிய யுக்தி இதுவா என்பதை ஆமதாபாத் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

ஒருவேளை, உண்மையிலேயே நித்தியானந்தா இறந்திருந்தால், அவருடைய ரூ.4 ஆயிரம் கோடி சொத்துகளுக்கு யார் அதிபதி என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

நடிகை ரஞ்சிதா கைக்கு செல்லுமா? அல்லது வேறு யாராவது உரிமை கோருவார்களா? என்பதை பொறுத்து இருந்துதான் பார்க்க வேண்டும்.

# பதவி விலகினார் பிறத்வெய்ட்

மேற்கிந்தியத் தீவுகளின் டெஸ்ட் போட்டிகளுக்கான அணித்தலைவரான கிறேய்க் பிறத்வெய்ட் பதவி விலகியுள்ளதாக அந்நாட்டு கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அந்தவகையில் புதிய அணித்தலைவரின் கீழ் அடுத்த சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பை மேற்கிந்தியத் தீவுகள் ஆரம்பிக்கவுள்ளது.

பாகிஸ்தானுக்கான சுற்றுப்பயண முடிவிலேயே பதவி விலகும் முடிவை பிறத்வெய்ட் கோடிட்டுக் காட்டியாதாக கிரிக்கெட் சபை வெளிப்படுத்தியுள்ளது.

பிறத்வெய்ட்டின் கீழ் கடந்த 2017ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை 39 போட்டிகளில் விளையாடி 10 போட்டிகளில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள், 22 போட்டிகளில் தோற்றுள்ளது. 2021ஆம் ஆண்டிலிருந்தே நிரந்தர அணித்தலைவராக பிறத்வெய்ட் மாறியிருந்தார். பிறத்வ்யெட்டின் கீழ் 2022ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கெதிரான தொடரை வென்றதுடன், பாகிஸ்தானில் இம்முறை தொடரைச் சமப்படுத்தியதுடன், பிறிஸ்பேணில் அவுஸ்திரேலியாவுக்கெதிராக வென்றதும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

மேற்கிந்தியத் தீவுகளின் அடுத்த டெஸ்ட் தொடராக அவுஸ்திரேலியாவுக்கெதிரான தொடருக்கு மூன்று மாதங்கள் இருக்கையில்,



புதிய அணித்தலைவர் எதிர்வரும் வாரங்களில் அறிவிக்கப்படுவாரென சபை கூறியுள்ளது.

இதேவேளை இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளுக்கான அணித்தலைவராகவும் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான அணித்தலைவர் ஷே ஹோப் நியமிக்கப்பட்டுள்ளார். தலைமைப் பயிற்றுவிப்பாளர் டரன் சமியின் ஆலோசனையைத் தொடர்ந்தே இம்முடிவு எடுக்கப்பட்டதாக சபை வெளிப்படுத்தியுள்ளது.

றொவ்மன் பவலையே ஹோப் பிரதியிட்டுள்ளார். கடந்த 2023ஆம் ஆண்டு அணித்தலைவராக நியமிக்கப்பட்ட பவலின் கீழ் இந்தியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்காவுக்கெதிரான தொடர்களை மேற்கிந்தியத் தீவுகள் வென்றிருந்தது.




# “எங்கும் செல்லேன்”

நடப்புப் பருவகால முடிவில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டிலிருந்து வெளியேற புரூனோ பெர்ணாண்டஸை அனுமதிக்க மாட்டேன் என அவருக்கு கூறியதாக அக்கழகத்தின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் ருபென் அமோரிம் தெரிவித்துள்ளார்.

ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட்டுக்கு 30 வயதான பெர்ணாண்டஸ் செல்லப் போகிறாரென தகவல்கள் வாரயிறுதியில் வெளியாட்கியிருந்தன.

யுனைட்டெட்டின் அணித்தலைவரான பெர்ணாண்டஸ், 2027ஆம் ஆண்டு வரை ஒப்பந்தத்தைக் கொண்டுள்ளார்.




### ஐ.பி.எல்:

# கொல்கத்தாவை வீழ்த்திய மும்பை

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), மும்பையில் திங்கட்கிழமை (31) நடைபெற்ற கொல்கத்தா நைட் றைடர்ஸுடனான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மும்பை

கொல்கத்தா: 116/10 (16.2 ஓவ.) (துடுப்பாட்டம்: அங்கிரிஷ் ரகுவன்ஷி 26 (16), ரமன்டீப் சிங் 22 (12), மனிஷ் பாண்டே 19 (14), றிங்கு சிங் 17 (14), அஜின்கியா ரஹானே 11 (07) ஓட்டங்கள். பந்துவீச்சு: அஷ்வனி குமார் 4/24 [3], தீபக் சஹர் 2/19 [2], ஹர்திக் பாண்டியா 1/10 [2], மிற்செல் சான்ட்னெர் 1/17 [3.2], ட்றெண்ட் போல்ட் 1/23 [4], விக்னேஷ் புதூர் 1/21 [2])

மும்பை: 121/2 (12.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: றயான் றிக்கெல்டன் ஆ.இ 62 (41), சூரியகுமார் யாதவ் ஆ.இ 27 (09) ஓட்டங்கள். பந்துவீச்சு: வருண் சக்கரவர்த்தி 0/12 [3], ஸ்பென்ஸர் ஜோன்சன் 0/14 [2])

போட்டியின் நாயகன்: அஷ்வனி குமார்

இந்நிலையில் பெங்களூருவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் குஜராத் டைட்டான்ஸை றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு எதிர்கொள்கிறது.

# ஹலான்டுக்கு கணுக்கால் காயம்



இங்கிலாந்து கால்பந்தாட்ட சங்க சவால் கிண்ணத் தொடரின் போர்ண்மெத்துக்கெதிரான காலிறுதிப் போட்டியின்போது மன்செஸ்டர் சிற்றியின் முன்களவீரர் எர்லிங் ஹலான்ட் கணுக்கால் காயத்துக்குள்ளானதாக அக்கழகம் திங்கட்கிழமை (31) தெரிவித்துள்ளது.

ஹலான்டின் முழுமையான காயம் குறித்து அறிவதற்கு மேலதிக சோதனைகள் தேவைப்படுகிறது.

குறித்த போட்டியில் கோலைப் பெற்றிருந்த ஹலான்ட், 61ஆவது நிமிடத்தில் பிரதியிடப்பட்டிருந்தார்.


அந்தவகையில் மாத இறுதியில் நடைபெறவுள்ள நொட்டிங்ஹாம் பொரெஸ்டுக்கெதிரான அரையிறுதிப் போட்டியில் ஹலான்ட் விளையாடுவது சந்தேகத்துக்கிடமாகியுள்ளது.

### இத்தாலிய சீரி ஏ தொடர்:

# சமநிலையில் லேஸியோ-டொரினோ போட்டி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (01) அதிகாலை நடைபெற்ற டொரினோவுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் லேஸியோ சமப்படுத்தியது.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 67 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான இன்டர் மிலன் காணப்படுகின்றது. 64 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நாப்போலியும், 58 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் அத்லாண்டாவும், 56 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் பொலொக்னாவும் காணப்படுகின்றன.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 02, ஏப்ரல் 2025, இல.08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.